இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) 09 ஒக்தோபர் 2017 திகதியிடப்பட்ட ADB.org இல் உள்ள அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ASIAN DEVELOPMENT BANK

# இலங்கை: தெற்காசிய துணைப்பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு துறைமுக அணுகல் உயர்தப்பட்ட நெடுந்சாலை

| | |
|---|---|
| **திட்டத்தின் பெயர்** | தெற்காசிய துணைப்பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு துறைமுக அணுகல் உயர்தப்பட்ட நெடுந்சாலை |
| **திட்ட இலக்கம்** | 50299-001 |
| **நாடு** | இலங்கை |
| **திட்டத்தின் நிலை** | முன்மொழியப்பட்டது |
| **திட்ட வகை/ உதவி நடைமுறை** | கடன்<br>தொழில்நுட்ப உதவி |
| **நிதியிடல் மூலம்/ தொகை** | கடன்: தெற்காசிய துணைப்பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு துறைமுக அணுகல் உயர்தப்பட்ட நெடுஞ்சாலை<br>சாதாரண மூலதன வளங்கள் |

| | |
|---|---|
| | **TA: அதிவேகப் பாதைகளின் செயற்பாட்டு முகாமைத்துவத்தின் நிறுவனம் சார்ந்த வலுவூட்டல்** |
| | தொழில்நுட்ப உதவி சிறப்பு நிதியம் |
| **மூலோபாய செயற்பட்டியல்** | உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி<br>பிராந்திய ஒருங்கிணைப்பு |
| **மாற்றத்திற்கான இயக்கிகள்** | ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு<br>கூட்டாண்மை<br>தனியார்த்துறை அபிவிருத்தி |
| **துறை / உபதுறை** | **போக்குவரத்து** - சாலைப் போக்குவரத்து -(நகரம் அல்லாத) - போக்குவரத்துக் கொள்கைகள் மற்றும் நிறுவனம் சார்ந்த வளர்ச்சி |
| **பால் சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல்** | சில பால் மூலங்கள் |
| **விவரணம்** | முன்மொழியப்பட்ட திட்டம் கொழும்பின் மத்திய பிரதேசத்தில் புதிய களனிப் பாலம் மற்றும் காலி முகத்திடலிற்கு இடையில் கொழும்பு துறைமுக வளாகத்திற்கு ஊடாக சுமார் 5.4 கிலோமீற்றர்கள் உடைய ஒரு உயர்த்தப்பட்ட கட்டணம் செலுத்து நெடுங்சாலையை நிர்மாணித்து, கட்டணம் செலுத்தும் சாலைகளின் செயற்பாடு மற்றும் பராமரிப்பினது நிறுவனத் திறனை வலுவூட்டும். இது நகர மத்தியிலிருந்து கொழும்பு-கட்டுநாயக்க அதிவேகப்பாதைக்கு புதிய களினிப் பாலம் ஊடாக ஒரு நேரடி இணைப்பினை வழங்கி, இலங்கையின் அதிவேகப்பாதைக் கட்டமைப்பினுடைய ஒரு பகுதியை உருவாக்கும். இத்திட்டம் சர்வதேச துறைமுகத்தைச் சூழ மக்கள் அதிகமாக வசிக்கும் பிரதேசங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு உதவும், அதன்மூலம் பொருளாதார வினைத்திறன் மற்றும் போட்டித்திறனை அதிகரிக்கும். |
| **திட்டத்தின் காரண விளக்கமும் நாடு/ பிராந்திய மூலோபாயத்திற்கான தொடர்பும்** | அரசாங்கத்தின் அபிவிருத்தி கொள்கை கூற்று உலகளாவிய போக்குவரத்து சாம்ராச்சியத்தில் மற்றும் வர்த்தக செயற்பாடுகளில் பொருளாதார ஒருங்கிணைபினைத் தொடர்வதில் ஒரு மையமாக இலங்கையின் மூலோபாய முக்கியத்துவத்தினை கோடிட்டுக் காட்டுகின்றது. உற்பத்தித்திறன் மேம்பாடு, வணிக வசதியளிப்பு, மற்றும் இருதரப்பு பொருளாதார ஒருங்கிணைப்பு என்பனவற்றினை இலக்காகக் கொண்ட ஏற்பாடுகளுடன் ஏற்றுமதி அபிவிருத்தியினை ஒரு மேல் முன்னுரிமையாக அரசாங்கம் கூட வலியுறுத்தியுள்ளது. 2017-2020 பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் வினைத்திறனான |

| | |
|---|---|
| | சாலைக் கட்டமைப்பினை ஏற்படுத்துவதன் ஊடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிப்பதற்கு கொள்கை வழிகாட்டல்களை வழங்குகின்றது. கொள்கையினை அடைவதற்கான முக்கிய மூலோபாயங்களாவன (i) அதிவேகப் பாதை கட்டமைப்பினை விரிவாக்குவதன் ஊடாக முக்கிய பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை இணைத்து வினைத்திறனான அசைவாற்றலை வழங்குவது; மற்றும் (ii) கொழும்பு பெருநகரப் பிரதேசத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு ஒரு உயர்த்தப்பட்ட சாலைக் கட்டமைப்பினை உருவாக்குவதாகும். முன்மொழியப்பட்ட திட்டம் பெருநகர மேற்கு பிராந்திய பெரும் திட்டத்தில் ஒரு முன்னுரிமை சாலைத் திட்டமாக இனங்காணப்பட்டிருக்கின்றது. அரசாங்கத்தின் தேசிய மூலோபாயத்திற்கு இணங்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நாட்டிற்கான கூட்டாண்மை மூலோபாயம் 2018-2022 பின்வரும் தூண்கள் ஊடாக தேசிய அபிவிருத்திக்கான முக்கிய தடைகளை எதிர்கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது: (i) பொருளாதார வளர்ச்சியின் இயக்கிகளைப் பலப்படுத்துதல்; மற்றும் (ii) வளர்ச்சியின் தரத்தினை மேம்படுத்துதல். முதலாவது தூணிற்கு, ADB வளர்ச்சி- சார்ந்த உட்கட்டுமானம் ஏற்படுத்தப்படுவது தொடர்பில் அதிகமானதொரு மதிப்பினை வழங்குகின்றது. இது கொழும்பு துறைமுகத்திற்கான சிறந்த இணைப்பின் மூலம் உயர்த்தப்பட்ட பிராந்திய ஒத்துழைப்பினை உள்ளடக்குகின்றது. நிதி முகாமைத்துவத் திறன், செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பிற்கு ஆதரவளிப்பதற்கு நிறுவன திறன் வலுப்படுத்தல்களுக்குக் கூட வலியுறுத்தல் தரப்பட்டுள்ளது. |
| **தாக்கம்** | நாட்டினது பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிக்கப்பட்டது |
| **திட்ட விளைவு** | திட்ட சாலை வழியே போக்குவரத்து வினைத்திறன் அதிகரிக்கப்பட்டிருத்தல் |
| **வருவிளைவுகள்** | புதிய உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை கட்டப்பட்டிருத்தல்<br><br>அதிவேகப்பாதைகளின் செயற்பாடு மற்றும் பராமரிப்புத் திறன் வலுவூட்டப்பட்டிருத்தல் |
| **பூகோளம்சார் அமைவிடம்** | |
| **பாதுகாப்பு வகைகள்** | |
| **சுற்றுச்சூழல்** | B |
| **சுயவிருப்பற்ற மீள்குடியேற்றம்** | |

| | |
|---|---|
| **சுதேச மக்கள்** | |
| **சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்த பார்வைகளின் சுருக்கம்** | |
| **சுற்றுச்சூழல் அம்சங்கள்** | |
| **சுயவிருப்பற்ற மீள்குடியேற்றம்** | |
| **சுதேச மக்கள்** | |
| **பங்குதாரர் தொடர்பு, பங்குபற்றல், மற்றும் ஆலோசனை** | |
| **திட்ட வடிவமைப்பின் போது** | |
| **திட்ட செயற்படுத்தலின் போது** | |
| **வியாபார வாய்ப்புக்கள்** | |
| **ஆலோசனைச் சேவைகள்** | பொருட்கள்,வேலைகள், ஆலோசனை அல்லாத மற்றும் ஆலோசனை சேவைகளின் கொள்வனவிற்கு, ADB யின் கொள்வனவு கொள்கை (2017, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) மற்றும் ADB யின் கடன் பெறுனர்களுக்கான கொள்வனவு ஒழுங்குவிதிகள் (2017, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) பிரயோகமாகும். |
| **கொள்வனவு** | பொருட்கள், வேலைகள், ஆலோசனை அல்லாத மற்றும் ஆலோசனை சேவைகளின் கொள்வனவிற்கு, ADB யின் கொள்வனவு கொள்கை (2017, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) மற்றும் ADB யின் கடன் |

| | |
|---|---|
| | பெறுனர்களுக்கான கொள்வனவு ஒழுங்குவிதிகள் (2017, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) பிரயோகமாகும். |
| **பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர்** | நாகாய், கன்ஷோ |
| **பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கித் திணைக்களம்** | தெற்காசியத் திணைக்களம் |
| **பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு** | போக்குவரத்து மற்றும் தொடர்பாடற் பிரிவு, தெற்காசியத் திணைக்களம் |
| **நிறைவேற்று முகவர்கள்** | உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு<br>8வது மாடி, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,<br>கொஸ்வத்த,<br>பத்தரமுல்லை, இலங்கை |
| | துறைமுகங்கள் மற்றும் கப்பற் போக்குவரத்து அமைச்சு<br>இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,<br>#19, தேவாலய வீதி, கொழும்பு 01,<br>இலங்கை |
| **கால அட்டவணை** | |
| **எண்ணக்கரு அனுமதி** | 19 செப்தெம்பர் 2017 |
| **உண்மை அறிதல்** | 16 ஒக்தோபர் 2017 இலிருந்து 30 ஒக்தோபர் 2017 |
| **MRM** | 29 நவம்பர் 2017 |

| | |
|---|---|
| **ஒப்புதல்** | - |
| **கடந்த மீளாய்வுப் பணிநோக்கு** | - |
| **கடந்த PDS புதுப்பிப்பு** | 21 செப்தெம்பர் 2017 |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: திட்டத் தரவுத் தாள் செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாதிருக்கலாம் ஆனால் அது கிடைக்கப்பெறும் போது சேர்த்துக்கொள்ளப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் தகவல் தரவுத் தாளில் (PDS) உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியானது உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு உள்ளபடி வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும் பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதித்துவங்களையோ மேற்கொள்ளவில்லை.